

மக்கள் விடுதலை

# புதிய மனிதன்

இலக்கிய இதழ்

இதழ் எண் : 94 மகிழ்ச்சிக்கு வழி மார்க்சியமே ஆக 1 - 2022



## சேர வாரும் செகத்தீரே

## பிரதிபலிப்பு அறிவுப் பந்தி

## சென்சாரைத் தொடர்ந்து விளையாடிய நாளேடு

**புதிய மனிதன்**

இலக்கிய மாத இதழ்

இதழ் எண் : 94 ஆகஸ்ட் 1 - 2022

பொறுப்பாசிரியர்

**பாட்டாளி**

ஆசிரியர்

**ஜெ. சிதம்பரநாதன்**

ஆசிரியர் குழு

**பேரா. திருமா**

**விடுதலைக்குமரன்**

**மு. மணிகண்டன்**

வடிவமைப்பு

**பாட்டாளி**



மின்னஞ்சல் முகவரி

puthiyamanithanithazh@gmail.com

வலைப்பூ

puthiyamanithanithazh.blogspot.com

புலன எண் (வாட்ஸ் ஆப்)

94435 45262


# நுழைவாயில்


தலையங்கம்

சேர வாரும் செகத்தீரே 3

கவிதை வெளி

தனலெட்சுமி 6

சதீஷ் குமரன் 7

இரமணி சர்மா 9

சிறுகதை வெளி

சிந்து சீனு 10

கட்டுரை வெளி

இயக்குனர் ருத்ரன் 15

பிரதிபலிப்பு

வெற்றிப் பேரொளி 26

மக்கள் விடுதலை பண்பாட்டுப் பேரியக்கத்தின் புதிய உதயம் 28

தலையங்கம்

# சேர வாரும் செகத்தீரே!

உலகளாவிய மனித இனங்களில் செழுமையான வளமையான மொழியையும், செம்மாந்த தனித்ததொரு பண்பாட்டையும் கொண்டது நம் தமிழ் இனம். தனிவுடைமை வழித் தோன்றிய முதலாளியமும், அதன் சுரண்டலும், அதற்காக அது தொடுத்துவரும் அடக்குமுறைகளும் ஒடுக்குமுறைகளும் உலகு தழுவி மனித குலம் எதிர்கொண்டு வருகிறது. என்றாலும், இந்தப் பொதுவானதோடு சேர்ந்து குறிப்பானதாக சாதியும் அதன் படிநிலைக் குரூரங்களும், நம் தமிழ் இனம் உள்ளிட்ட பிற இந்திய ஒன்றிய இனங்களுக்கும் விதிக்கப்பட்ட கூடுதல் வன்கொடுமையாகும்.

நாம் மொழியால் இனத்தால் தமிழர்கள். நம்மின



மக்களின் விடுதலைக்காய் நாம் களமாடும் மண் இந்தத் தமிழ் மண். எனவே, நாம் நம் நிலத்தில் வலுவாகக் காலூன்றி நின்றுகொண்டு, நம்மின மக்களின் விடுதலைக்காய்ப் போராடி வெல்வதோடு, நமது போராட்ட ஒருமைப்பாட்டுக் கரங்களை விரியத் திறந்து, எங்கெல்லாம் மானுடம் காயப்படுகிறதோ, துன்பப்படுகிறதோ, அடக்கி ஒடுக்கப்படுகிறதோ அங்கெல்லாம் அனைவரையும் ஆறத் தழுவி அணைத்துக் கொண்டு, உலகு தழுவிய மனித குல விடுதலைக்காய் களமாட வேண்டியவர்கள் நாம்.

நம் தமிழ் மண்ணில் எழுந்த எழுகின்ற அரசியல் கட்சிகள், இயக்கங்கள் என அனைத்திற்கும் பல இணை அமைப்புகள், துணை அமைப்புகள் உள்ளன. மாணவர், இளைஞர், பெண்கள், உழவர், தொழிலாளி என அனைத்திற்கும் தனித்த இயக்கங்கள் உள்ளது போலவே கலை இலக்கிய பண்பாட்டு அமைப்புகளும் உள்ளன. வரலாற்றில் இடதுசாரிகள், செங்கொடி இயக்கத்தினர் என்று மட்டுமல்ல வலதுசாரிப் பிற்போக்குவாதக் கட்சிகளுக்கும், பாசிச அமைப்புகளுக்கும் கூட கலை இலக்கியப் பண்பாட்டு இயக்கங்கள் அமைப்புகள் உள்ளன.

அதன்வழியில் புதிதாய்த் துவக்கப்பட்ட கலை இலக்கிய பண்பாட்டு அமைப்புதான் மக்கள் விடுதலைப் பண்பாட்டுப் பேரியக்கம். ஏற்கெனவே நிறைய கலை இலக்கிய அமைப்புகளும்... பண்பாட்டு இயங்கங்களும் களமாடி வருகிற சூழலில் மக்கள் விடுதலை பண்பாட்டுப் பேரியக்கம் என்கிற புதியதொரு அமைப்பு எதற்கு?

உண்மைதான். ஏற்கெனவே இங்கு களமாடி வருகிற கலை இலக்கிய அமைப்புகளும்... பண்பாட்டு இயக்கங்களும் வலதுசாரி பிற்போக்குப் பாசிச சக்திகளின் கருத்தியலுக்கு, முன்வைப்புகளுக்கு, அவர்கள் முன்வைக்கும் நிகழ்ச்சி நிரலுக்கு எதிர்க் குரல் கொடுத்து எதிர்வினையாற்றுபவர்கள்தாம். மறுக்கவியலாது.

ஆனால் நாமோ நமக்கான புதிய நிகழ்ச்சி நிரலை, மக்கள் விடுதலைக்கான நிகழ்ச்சி நிரலைக்

புதிதாய்க் கட்டமைப்பவர்கள். மக்கள் விடுதலைக்கான ஒரு மாற்றுப் பண்பாட்டுச் சூழலைக் கட்டி எழுப்புபவர்கள். அதனை கலை இலக்கிய வடிவங்களிலும், மாற்றுப் பண்பாட்டுக் கொண்டாட்டங்களை முன்மொழிந்து மாற்றுப் பண்பாட்டுத் திருவிழாக்களை மக்கள் விடுதலைக்கான நிகழ்ச்சி நிரலாக்குபவர்கள். இதனைச் சாத்தியப்படுத்த நாம் உருவாக்கியுள்ள அமைப்பே மக்கள் விடுதலை பண்பாட்டுப் பேரியக்கம்.

எத்தனை காலம்தான் எதிரிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு நாம் எதிர்வினையாற்றுவது. இனி நாம் புதிய மக்கள் விடுதலைக் களங்களுக்கான நிகழ்ச்சி நிரலைக் கட்டமைப்போம். இனி நமது நிரலுக்கு எதிரிகள் எதிர்வினை தொடுக்கட்டும்.

வாருங்கள் நண்பர்களே. நமக்கான செயல்திட்டத்தை நாம் வகுப்போம். புதிய மாற்றுப் பண்பாட்டுச் சூழலைக் கட்டமைப்போம். மக்கள் விடுதலையைச் சாத்தியப்படுத்துவோம். கலையால், இலக்கியத்தால், மின்னணுக் காட்சி ஊடகத்தால் மக்கள் விடுதலைக்கான மாற்றுப் பண்பாட்டை முன்மொழிந்து, அதை மக்கள் விடுதலைக்கான நிகழ்ச்சி நிரலாக்குவோம்.

பறையிசையை முதன்மையாய்க் கொண்ட பிற நவீன இசைக்கருவிகள் இசைக்கத் தெரிந்த இசைக் கலைஞர்களே... மக்கள் விடுதலைப் பாடல்களால்... நாடகங்களால்... பாடத் தெரிந்த, நடிக்கத் தெரிந்த, நெறியாள்கை செய்யத் தெரிந்த நிகழ்த்து கலைஞர்களே... ஓவியம், கதை, கவிதை, கட்டுரை, புதினம் என இயற் தமிழ்ப் படைப்பாளிகளே... நவீன தொழில்நுட்ப மின்னணு ஊடகக் கலைஞர்களே... வாருங்கள். ஒன்றிணைவோம். நம் கனவு... தாகம்... இலக்கு... இவைகளைச் சாத்தியப்படுத்த இயக்கமாய் மட்டுமல்ல. பேரியக்கமாய்த் திரள்வோம்.

மக்கள் விடுதலை பண்பாட்டுப் பேரியக்கத்தின் தாகம்... இலக்கு...

*சாதி ஒழிந்த தன்னாட்சி கொண்ட நிகரமைத் (சோசலிசத்) தமிழ்நாடு.*

கவிதை வெளி

# தனலெட்சுமி கவிதைகள்

பொறுமையோடு கரை.
சீண்டியபடியே
அலை.

ஒரே கம்பம்
மாறிப் பறக்கின்றன
கொடிகள்.

அமர்ந்து ரசித்த திடல்
எழுந்து நிற்கிறது
கட்டிடமாய்.

என்னை விட
அழகாய் தெரியும்
எனது நிழல்.

கொடி படரும் ஏணிக்கு
தோள் கொடுக்கும்
சுவர்



# சதீஷ் குமரன் கவிதைகள்

மீண்டும் ஒட்டவே முடியாது
என்று தெரிந்த பின்னும்
உன்னோடு ஒட்டவே
துள்ளித் துடிக்கும்
பல்லியின் வாலாய்
என் காதல்.

குட்டியானைகளில் ஏறி
குறுக்குச் சந்துகளில் பயணிக்கும்
காவிரி நீரைப்
பின்தொடர்ந்து போன
காகம் ஒன்று
திசை மாறிப்போய்
யாரோ வீசிய
சாம்பார் பாக்கெட்டை கவ்வி
வெய்யில் கொத்திப் பறக்கிறது.

உச்சந்தலையைப் பிடித்து
ஆட்டி உலுக்கும்
சூறைக்காற்று கண்டு
அஞ்சவில்லை
முருங்கையின் நுனிப் பசுந்தளிர்
ஆட்டம் போடுகிறது.

வீசிடும் சூறைக்காற்று
இடையிலும் நுழைந்து
செவியில் வழிகிறது
மாமரக் குயிலின் பிரிவுத் துயர்.

மூச்சை இழுத்தாலும் விட்டாலும்
போகத்தான் போகிறது.
ஒரு குடம் தண்ணீரின்றி
எங்கள் நிலத்தின் உயிர்.
எந்த ஆசனம் நீர் கொண்டுவரும்
சொல்.
குள(ல)ம் விழுங்கிய வெங்காயத்
தாமரையே.



## புதிய மனிதன்

கண்களை மூடி
ஆழ்நிலைக்குச் செல்லுங்கள்.
மூச்சை இழுத்து உள்ளே
நிறுத்துங்கள்.
பரவச பரவெளி வசப்படும்.
பரவெளியிலேயே சுற்றுங்கள்.
நிலம் நமக்குச் சொந்தமில்லை.
ஏகாதிபத்தியத்திடம்
ஏலம் போய்விட்டது.

ஒரு கை நீரள்ளிக்
குடிக்க வக்கற்ற நிலத்தில்
ஓடும் சாக்கடை நீரை
நக்கிக்குடிக்கும் நாயை
ஏக்கத்துடன் பார்க்கும்
தாகமெடுத்த நிலவுக்கு
நாளை
யோகா தினமென்று
சொல்லி அனுப்பிவிட்டேன்.

ஒரு குடம் தண்ணீர் எடுக்க
ஏழெட்டு மைல் நடந்து போவது
என்ன ஆசனம்?
பாரத் மாதா.

சுடுகாட்டிற்குத்தான் பாதை
கேட்டோம்
எங்கள் நிலத்தையே ஏன்
சுடுகாடாக்குகிறாய்
எட்டு வழிச்சாலையே!

இவ்வளவு வேகமாக
எங்கள் பிணங்களை
அள்ளிச் செல்ல
ஏன் வருகிறாய்
எட்டுவழிச் சாலையே.

தேங்கிநிற்கும்
இந்த இரண்டு நாள்
அணைகளில்
அடுத்த ஐந்து
நாள்களுக்கான
மின்சாரத்தை
உற்பத்தி செய்கிறார்கள்
அம்மாக்கள்
காற்றாலையாய் அப்பாக்கள்.

மண்ணின் மொழியை
மக்களின் வலியை
மரங்களின் பாடலை
கானகத்தின் காதலை
காலந்தவறாமல்
காற்றின்
அலைவரிசையில்
கரைந்துருகும்
பாட்டாளி வர்க்கக்
குயில்தான் எமக்குத் தோழர்.

# இரமணி ஷர்மா கவிதைகள்

## நிமித்தம்

அலங்காரங்களை
பசையிட்டு காட்சிப்பிழையாய்
கடக்கும் வாழ்வில்

சுவாசங்களை உறிஞ்சும்
மௌனங்களின்
மாயப்பொழுது

இமைகளைத்திற
ஏதேனும் சொல்

எவ்விதமாவது நிரப்பு
காலிக்குடுவையை

பறத்தல் நிமித்தம்

## சாத்தியம்

இமைமூடி
கரம் கூப்பி
ஆசனமிட்டு
எதை உணர்த்துகிறாய்
எதை உணர்ந்து கொள்ள

துறவா
அறமா
பற்றறுத்தலா

இயந்திர கதியில்
எது சாத்தியம்
எங்களுக்கு



சிறுகதை வெளி

# வெண்புறா

சிந்து சீனு

"கவுந்து அடிச்சு படுத்தா என்ன அர்த்தம்?"

வழக்கத்திற்கு மாறாக மனைவியின் குரல். இரவு 12 நெருங்கிவிட்டது. அவளுக்கு வேலை முடித்து வந்ததும் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் அவளுக்குத் தூக்கம் வரும். கண்களைச் சுற்றிப் பார்த்தேன். இரண்டு மகள்களும் ஒரே பாயில் கிழக்கு நோக்கிப் படுத்து உறங்கி விட்டனர். பெரியவள் பத்தாம் வகுப்பு இறுதித் தேர்வு எழுத வேண்டும். அடுத்தவள் ஏழாம் வகுப்பு.

மூத்தவள் இரண்டு நாட்களுக்கு முன்பு, பள்ளிக்கூடத்தில் ஏதோ விழாவாம். விழாவிற்குச் சிறப்பு விருந்தினர் வரவுள்ளனராம். அவர்களின் முன்பு 12 வெண்புறாக்களை உலக அமைதிக்காகப் பறக்கவிட வேண்டுமாம். அதற்கு வெண்மை நிறத்தில் உடைகள், காலணிகள், தொப்பி என பள்ளி ஆசிரியர் ஒரு குறிப்பிட்ட கடையைத் தேர்வுசெய்து அங்குதான் வாங்கவேண்டும். வேறு எங்கும் கிடைக்காது என அச்சமூட்டி,



## புதிய மனிதன்

அவ்விழாவில் என் மூத்த மகளின் பெயரையும் சேர்த்துவிட்டு, விழாவில் அவசியம் கலந்துகொள்ள வேண்டும் என வற்புறுத்தல். எங்களின் நிலைமையை யாரிடமும் சொல்லிப் புரிய வைக்க முடியாது. கூலிக்காரன் மகன் கூலிக்காரனாகத்தான் ஆக வேண்டும் என்பது பலரது வாழ்க்கையின் நிதர்சனம். யாரிடம் என் குறைகளைச் சொல்வது.

மனைவியிடம் சொன்னால் “துப்புக்கெட்ட மனுஷன். பெத்த பிள்ளைக்கு ஒரு டிரஸ் வாங்கிக் கொடுக்க முடியாதா? ஆனா பாரு. காலையில் 8 மணிக்கு வேலைக்கு கிளம்பினா.. ராத்திரி பதினோரு மணிக்குத்தான் வீட்டுக்கு வர்றது. என்னா உழைச்சு என்னா பெரிய...? உனக்கு வாக்கப்பட்டு வந்து என்ன சுகத்தைக் கண்டேன்” அவள் புலம்பல் அளவு மீறும்.

எனக்கு மிகப் பெரும் செல்வந்தரின் மருத்துவமனையில் அட்டெண்டர் வேலை. மாதம் பத்தாயிரம் சம்பளம். பேருக்குதான் மாத சம்பளம். தவிர லீவும் கிடையாது. மேல் வருமானமும் கிடையாது. பணிபுரியும் இடத்தில் ஏற்கனவே 40 ஆயிரம் கடன். பிள்ளைகள் படிப்புக்காக வாங்கியது. மாதாமாதம் கரெக்ட்டாகச் சம்பளத்தில் பிடித்தம் செய்து விடுவார்கள். எப்போதாவது யாராவது 50, 100 கொடுப்பார்கள். அதுவும் ஏதாவது ஒரு வகையில் செலவாகிவிடும்.

> அதுவும் டீக்கடையில் 4 பேர் எதிரில் சொன்னபோது மிகவும் அவமானமாகி விட்டது.

இன்று காலை நன்கு பழக்கமான ஆட்டோ தொழில் செய்வதோடு, வட்டிக்குவிடும் நண்பரிடம் கடனாகக் கேட்க,

“உனக்குத் தெரியாதது ஒன்னும் இல்ல. ரெண்டு வருஷமா பொழப்பே சரியில்ல. பணமும் சரியாக வரவில்லை. அடுத்தமுறை பார்க்கலாம்“ என்று கையை விரித்து விட்டான். அதுவும் டீக்கடையில் 4 பேர் எதிரில் சொன்னபோது மிகவும் அவமானமாகி விட்டது. என் கையாலாகாதத்தனத்தை எண்ணி நொந்து கொண்டேன்.

# புதிய மனிதன்

வழக்கமாக மருத்துவமனையின் உடைகளை மாற்றிவிட்டு, முகம் கழுவிக்கொண்டு சாப்பிடுபவன், இன்று வந்ததும் தலையணை எடுத்து துக்கம் மனதை நோகடிக்க தலையணையில் முகம் புதைத்துக் கொண்டேன். என் மனைவிக்கு வேலை முடிந்து வந்தவுடன் பேசாமல் சாப்பிட்டுவிட்டுப் படுத்துவிட வேண்டும். இல்லை என்றால் பேச்சுவாக்கில் சண்டை வரும். உடைகளை மாற்றிக் கொண்டு லைட்டை அணைத்துவிட்டுப் படுத்தேன்.

வீட்டு வாடகை, மளிகைச் சாமான்கள், தண்ணீர்க் கட்டணம் என கணக்கு எங்கெங்கோ இழுத்துச் சென்றாலும், என் மனைவியின் சாமர்த்தியம் மற்றும் நியாய விலைக்கடை மூலம் ஓரளவு சரி செய்து வந்தாள்.

பெரிய மருத்துவ ரிடம்தான் பணம் கேட்க வேண்டும். அவரிடம் விழாவிற்குத் தேவையான பணத்தைப் பெற்றுக் கொண்டு, மூத்தவளுக்கு உடையும், பள்ளிக்கு நன்கொடையும் அளிக்க வேண்டும். உடல் அசதியால் படுத்தவன் அசந்துவிட்டேன்,

மறுநாள் காலை ஆறு மணிக்கு எழுந்து வீட்டில் மனைவிக்குச் சிறிது உதவிகள் செய்துவிட்டு, சைக்கிளை எடுத்துக்கொண்டு பணிபுரியும் மருத்துவமனைக்குச் சென்று, அங்கு பணிபுரிபவர்களிடம் வழக்கமாகச் சொல்லும் வணக்கம் இன்றுமட்டும் நான் சொன்னது எனக்கே புரியவில்லை.

வேலைக்குச் செல்லும் முன்பு சொல்லி அனுப்பினார்கள்.



## புதிய மனிதன்

“இன்னும் நாலு நாள்ல டிரஸ் வாங்கி டீச்சர் கிட்டக் காட்டணும்“.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. காலை உணவு கேன்டீனில் மூன்று இட்லி இலவசம். சாப்பிடக் கூடத் தோன்றவில்லை. எப்போதும் பத்து மணிக்கு வரும் மூத்த டாக்டர் இன்று வரவில்லை. எங்கோ அவசரம் என்று வெளியூர் சென்று விட்டாராம். என் தலையில் சம்மட்டியால் அடித்தது போன்ற வலி உணர்வு. அப்பா, மகன், மருமகள் என அனைவரும் மருத்துவர்கள். பெரியவர்தான் எனக்கு உதவி செய்வார். அன்பைப் பொழிவார். மகனுக்கும் மருமகளுக்கும் நான் வேண்டாதவன். யாரிடம் கேட்பது? உடைகளை வாங்குவது? துணிக்கடையின் போன் நம்பரில் விசாரித்ததில் இரண்டு ஆயிரம் ரூபாய் என்றதும் அமைதியாக போனை வைத்து விட்டேன்.

அன்று முழுவதும் தனிமையில் இருப்பதாக உணர்ந்தேன். புரியவில்லை. தடுமாற்றம். என் நிலையை எண்ணி மிகுந்த வருத்தம். என்ன செய்வது? யோசிக்க யோசிக்க... கதறவேண்டும். அழ வேண்டும் போல் இருந்தது. மருத்துவமனையில் ஊழியன் என்ற பெயரைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.

மருத்துவமனையின் வாசலில் ஆம்புலன்ஸ் ஒன்று வந்து நின்றது. வயதான முதியவர் ஒருவர் மிகுந்த உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவரைக் கவனித்துக் கொள்ள யாருமில்லை. அவரின் மகனும், மகளும், அவர்கள் குடும்பத்தினர் அனைவரும் வெளிநாட்டில் உயர்ந்த பணியில் உள்ளனராம். மருத்துவருக்கு உறவினராம். வேறு வழியில்லாமல் இரவும் பகலும் அவரைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு என்னிடம் வந்து சேர்ந்தது.

> **யோ**சிக்க யோசிக்க... கதறவேண்டும். அழ வேண்டும் போல் இருந்தது.

## புதிய மனிதன்

மூன்றுநாள் இரவு பகல் பார்க்காமல், உறக்கம் இல்லாமல் பார்த்துக் கொண்டேன். முதியவர் குணமடைந்து வீடு திரும்பும்போது, என் கையில் பணத்தைத் திணித்தார். அவரின் கண்களில் இருந்த பார்வை என்னிடம் பல விஷயங்கள் பேசின. முதியவரை அனுப்பிவிட்டு அவர் கொடுத்த பணத்தை எண்ணிப் பார்த்தேன். இரண்டாயிரம் ரூபாய் இருந்தது. மருத்துவமனையில் இருந்து குறிப்பிட்ட அந்தத் துணிக்கடைக்குச் சென்று உடைகளை வாங்கிக்கொண்டு வந்து சேர்ந்தேன். நடுஇரவில் வீட்டிற்குச் சென்று மனைவியிடம் உடைகளை கொடுத்துவிட்டு சாப்பிட்டுப் படுத்தேன். சந்தோசமாக இருந்தது.

அன்று விழா காலை 11 மணிக்கு. எனக்கு விடுப்பு இல்லை. பெரிய மருத்துவருக்கு உதவியாக அன்று அதிகமான பணிச் சுமைகள். அவரின் தயவால் மதிய உணவு இலவசம். மாலை காப்பி. அவருக்கும் சுகர் ஆம். அவரைப் பார்த்துக்கொள்ளும் பொறுப்பு என்னிடம் தரப்பட்டது. வேலை முடிந்து வீட்டிற்கு வந்தபோது, மனைவியின் முகத்தில் வாட்டம். மகள்களின் உறக்கம். சாப்பிட உட்கார்ந்த போது,

“11 மணிக்கு விழான்னு சொல்லிட்டு மதியம் 2 மணிக்குத்தான் ஆரம்பிச்சாங்க. மொத்தம் 12 புறா வாங்கி வச்சிருந்தாங்க. அதில் ஒன்னு மட்டும் நோவோ நொாடியோ என்னமோ தெரியல... “

என்னால் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

“என்ன ஆச்சு?...”

“ஒரு புறா செத்துப் போச்சு. அதுனால நம்ம மகளை ஓரமா இருன்னு சொல்லிட்டு மத்தவங்கள வச்சு உலக சமாதானம் என்கிற பேர்ல புறாவைப் பறக்க விட்டாங்க. அவ பாவம் ஏமாந்துட்டா...”

ஏமாந்தது மகள் மட்டுமா? என் மனம் மகளையும் புறாவையும் எண்ணி... எண்ணிக் கனத்தது.

கட்டுரை வெளி

# "நாங்களும் சளைத்தவர்கள் அல்லர்": சென்சாரைத் தொடர்ந்து, 'விளையாடிய' நாளேடு.

இயக்குனர் ருத்ரன்

'₹2000' திரைப்படத்தை டிசம்பர் 3, 2021-ல், திரையரங்குகளில் வெளி-யிடுவதற்கான பணிகள் தொடங்கப்பட்டது. முக்கியமாக, தமிழ்நாடெங்கிலும் எத்தனைத் திரையரங்குகள் வாய்க்கிறது என்பதை உறுதி செய்து கொள்ளவேண்டும். அதற்கு ஏதுவாக, படம் வெளியாவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னதாக, 'தினத்தந்தி' நாளேட்டில் கால்பக்க விளம்பரம் செய்தாகவேண்டும். அதன் பிறகுதான் திரையரங்குகளின் ஒப்புதலைப் பெறமுடியும். இது, தமிழ்த் திரையுலகில் எழுதப்படாத விதி.

திரைப்பட நிறுவனத்திற்கும் தினத்தந்தி நாளேட்டிற்கும் இடையில் தொடர்பாளராக இயங்குவதற்கான ஏஜெண்ட் ஒருவரை நியமித்தாகி விட்டது. இனி, படத்தின் டிசைன் ஒன்றினை நாளேட்டிற்கு கொடுக்கவேண்டும். டிசைன்



உருவாக்கப்பட்டு நாளேட்டிற்கு அனுப்பப்பட்டது.

அடுத்த அரைமணி நேரத்தில் ஏஜெண்ட்டிடமிருந்து அலைபேசி அழைப்பு.

“டிசைனை மாத்திக் கொடுக்கச் சொல்றாங்க சார்” என்றார்.

“என்ன பிரச்சினை” என்றேன்.

“சென்சார் தடையைத் தகர்த்துன்னு போட்டிருக்கிறத எடுக்கச் சொல்றாங்க“ என்றார்.

“சென்சார் தடை விதிச்சது, மேல்முறையீடு செஞ்சி ரிவைசிங் கமிட்டிக்குப் போனது, அவங்க சொன்ன நூற்றுக்கும் அதிகமான வெட்டுகளை எதிர்த்து 35 பக்க ஆவணங்களைக் கொடுத்து 24 வெட்டுகளா குறைச்சது, அதுக்குப் பின்னாடியும் UA சான்றிதழ்தான் தருவேன்னு சொன்னது, ‘₹’ என்கிற குறியீட சான்றிதழ்ல போடமுடியலன்னு சொல்லி தேவையில்லாம காலங்கடத்தி, சான்றிதழ்ல ரெண்டு இடங்கள்ல கையெழுத்துப் போட்டது... இதில்லாம் நடந்த உண்மைதானே. அதை டிசைன்ல சொல்றதுல என்ன தவறு. இதுல தினத்தந்திக்கு என்ன பிரச்சினை. கடந்த காலங்கள்லகூட பல படங்களின் விளம்பரங்கள்ல இப்படி வந்திருக்கே.” எனக் கேட்டேன்.

“சார், இதையெல்லாம் நானும் அவங்ககிட்ட சொன்னேன். டிசைனை மாத்திக் கொடுங்க, இல்லன்னா போடமுடியாதுன்னு சொல்றாங்க “ என்றார்.

நாளை வெளியாகிற தினத்தந்தியில் படத்தின் விளம்பரம் இடம்பெறாமல் போனால், திரையரங்குகளை உறுதிப்படுத்துவதில் சிக்கல் ஏற்படும். மேலும், குறிப்பிட்ட தேதியில் படம் வெளியாவதே கேள்விக்குறியாகிவிடும். உரிமைக்குரல் எழுப்புவதா அல்லது உரிமையை விட்டுக்கொடுத்து செயலினை நிறைவேற்றுவதா?

தொடக்கத்திலிருந்து, சென்சார் சான்றிதழ் வாங்கும் வரையில் பல சோதனைகளையும்

## புதிய மனிதன்

வேதனைகளையும் கடந்து, போராடி உருவாக்கப்பட்ட திரைப்படத்தின் கருத்துகள் மக்களிடம் சேர்க்கப்பட்டாக வேண்டும். அப்போதுதான் கடமை நிறைவடையும் என்னும் முடிவுக்கு வந்த நான், டிசைனிலிருந்து, 'சென்சார் தடையைத் தகர்த்து' என்னும் வார்த்தையை நீக்கித் தருமாறு டிசைனரைக் கேட்டுக் கொண்டேன்.

திருத்தம் செய்யப்பட்ட டிசைன் தினத்தந்திக்கு அனுப்பப் பட்டது.

பத்து நிமிடங்களுக்குப் பிறகு, ஏஜெண்ட்டிடமிருந்து மீண்டும் அழைப்பு.

"சார், கோர்ட் கூண்ட எடுக்கச் சொல்றாங்க"என்றார்.

"படத்துல இருக்குறததான டிசைன்ல போட்டிருக்கோம். அதை ஏங்க எடுக்கணும் " எனக் கேட்டேன்.

"இல்லன்னா விளம்பரத்த போடமாட்டாங்களாம், சார்"

"என்னங்க சார் இது, புதுபுதுசா கண்டிஷன் போடறாங்க" என்றேன்.

"ஆமாங்க சார். எனக்கும் இது புதுசாதான் இருக்கு. என்னோட நாற்பது வருஷ சர்வீஸ்ல இப்படி நடந்ததில்ல." என்று சொன்ன ஏஜெண்ட்,

"கோர்ட் கூண்ட எடுத்துட்டு அனுப்புங்க சார்" எனக் கேட்டுக் கொண்டார்.

செய்தியை டிசைனரிடம் சொன்னேன்.


"என்னங்க சார் இது, நம்ம படத்தோட டிசைனை முடிவு பண்றதுக்கு அவன் யாரு?"

டிசைனரின் குரலில் கோபம் தெரிந்தது.

"சரி, இப்போ என்ன செய்யலாம்" எனக் கேட்டேன்.

"நமக்கு வேற வழியில்ல. நேரம் பார்த்து அடிக்கிறாங்க. திருத்தி அனுப்புறேன் சார்." என்றார்.

இரண்டாவது முறையாக டிசைன் திருத்தப்பட்டு தினத்தந்திக்கு அனுப்பப்பட்டது.



சில நிமிடங்களில் ஏஜெண்ட் மீண்டும் அழைத்தார். டிசைன் ஏற்கப்பட்டது எனச் சொல்லுவார் என்னும் எதிர்பார்ப்புடன் பேசத் தொடங்கினேன்.

“சார், தாடி வெச்சிக்கிட்டு ஒருத்தர் இருக்காருல்ல, அவர எடுத்துட சொல்றாங்க.” என்றார்.

“படத்துல அவருதாங்க வில்லன். அவரு இல்லாம எப்படிங்க” என்றேன்.

“அவரு மோடி மாதிரி இருக்காராம். அதனாலதான் எடுக்கச் சொல்றாங்க.“

“அவரு பேரு கராத்தே வெங்கடேஷ். பரியேறும் பெருமாள் படத்துலகூட கொலைகள் செய்ற வேஷத்துல நடிச்சிருந்தாரு. அவரு இயல்பாவே தாடியோடதான் இருப்பாரு. நம்ம படத்துக்காக ஸ்பெஷல் மேக்கப் எதுவும் போடல.” என விளக்கினேன்.

“நானும் இதைத்தான் அவங்ககிட்ட சொன்னேன். ஆனாலும் அவரு படத்தை நீக்கினாதான் விளம்பரம் போடுவாங்கலாம்.” என்றார்.

“நாய், பூனை, குதிரை, யானை, கரடி,... இப்படி விலங்குகளைக்கூட டிசைன்ல போட்டு எத்தனையோ படங்களின் விளம்பரங்கள் வந்திருக்கு. ஒரு மனுஷனைப் போடக்கூடாதுன்னா என்னங்க அர்த்தம்“

“நானும் அப்படித்தான் கேட்டேன். வேற படங்களைப் பற்றிச் சொல்லாதீங்க, இந்தப் படத்தைப் பற்றி மட்டும் பேசுங்கன்னு சொல்றாங்க, சார்” என்றார்.

> “அவரு மோடி மாதிரி இருக்காராம். அதனாலதான் எடுக்கச் சொல்றாங்க.“

இப்போது, எனக்கு நடிகை கவுதமி நினைவுக்கு வந்தார். சென்சார் ரிவைசிங் கமிட்டியுடனான விவாதத்தின்போது, படத்தின் வழக்காடுமன்றக் காட்சிகளில் அம்பேத்கர் நிழற்படம் இடம்பெற்ற ஷாட்டுகளை நீக்கச்


சொன்னபோது, பல படங்களில் வழக்காடுமன்றத்தில் அம்பேத்கர் நிழற்படம் இடம் பெற்றுள்ளது என்பதையும், வழக்குரைஞர் வேடத்தில் கவுதமி நடித்த திரைப்படத்திலேயே அவர் வழக்காடு மன்றத்தில் பேசும் காட்சியில் அம்பேத்கர் படம் காட்டப்படுகிறது என்பதையும் நான் சுட்டிக்காட்டியபோது,

"மற்ற படத்தைப் பற்றி பேசாதீங்க, சார். உங்க படத்தைப் பற்றி மட்டும் பேசுங்க" என கவுதமி சொன்னதை நினைத்துப் பார்த்தேன். அதிகார வர்க்கத்தின் மொழி, எங்கேயும் எப்போதும் ஒன்றாகவே இருக்கும் என்பதற்கு மற்றுமொரு சான்று.

நாளிதழ்களில் தனக்கு இணையான - வலுவான போட்டி நாளிதழ் எதுவும் இல்லையெனும் ஆணவத்தில் தினத்தந்தி நாளேட்டின் நிர்வாகம் சர்வாதிகாரத்தனமாக நடந்து கொள்கிறது என்னும் எனது கருத்தினை ஏற்றுக்கொண்ட ஏஜெண்ட்,

"அதுமட்டுமில்ல சார். நம்ம விஷயத்துல ஏதோ பெரிய அழுத்தம் இருக்குன்னு நினைக்கிறேன். அவங்க பேசறதப் பார்த்தா அப்படித்தான் புரியுது." என்றார்.

நடப்பவைகளைப் பார்க்கிறபோது, தணிக்கை வாரியத்தில் தொடங்கிய தடைமுயற்சி நாளேடுவரை தொடர்வதை உணரமுடிந்தது. புறக்கணிக்க முடியாத ஆவணங்களை முன்வைத்து சென்சார் சான்றிதழ் பெற்றாகிவிட்டது. ஒன்றிய அரசின் தணிக்கை வாரியத்திற்கு ஏற்பட்ட இந்தப் பின்னடைவை எந்த வகையிலாவது ஈடுசெய்யும் முயற்சிகள் நடக்கும் என்பதை நான் ஊகித்திருந்தேன். எனது கணிப்பு, 'தினத்தந்தி' வடிவில் நிஜம் ஆனது.



## புதிய மனிதன்

சில நாட்களுக்கு முன்புதான், பாஜகவின் மாநிலத் தலைவராக இருந்த எல். முருகன், ஒன்றிய அரசின் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சராக நியமிக்கப் பட்டிருந்தார்.

“கூட்டிக் கழித்துப் பாரு, எல்லாம் சரியா வரும்“ என, நடிகர் ராதாரவி ஒரு திரைப்படத்தில் பேசும் வசனம் எனது நினைவுக்கு வந்தது.

அம்புலிமாமா கதையில், அடிக்கடி முருங்கை மரத்தில் ஏறிக்கொள்ளும் வேதாளத்தை மீண்டும் மீண்டும் தூக்கித் தனது தோளில் போட்டுக்கொள்ளும் விக்ரமாதித்யனிடம் இருந்த விடாமுயற்சி எனக்கும் அவசியமாகிப் போனது. ஆனால், எனது தோளில் இருப்பது கதைகள் சொல்லும் வேதாளம் அல்ல, மக்களுக்கான கருத்துகளைச் சொல்லும், ‘₹2000’. கேள்விகளை மட்டுமே வைத்திருக்கும் வேதாளம் அல்ல, மக்கள் விடுதலைக்கான கேள்விகளையும் அவைகளுக்கான பதில்களையும் வைத்திருக்கும்,’₹2000’. எனவே, மோடியின் முகம் என்று அச்சப்பட்டு தினத்தந்தி ஒதுக்கும் நடிகர் கராத்தே வெங்கடேஷ் முகத்தை எடுத்துவிட்டு டிசைனில் திருத்தம் செய்து கொடுக்கும்படி டிசைனரிடம் கேட்டுக்கொண்டேன். இப்போது, அவரது கோபம் மறைந்து, அது, என்மீதான பரிதாபமாக வெளிப்பட்டது.

“உங்களுக்கு மட்டும் ஏன் சார் இப்படி நடக்குது. எனக்குத் தெரிந்து இதுமாதிரி நடந்ததே இல்ல. உங்கள நெனைச்சா ரொம்ப வருத்தமா இருக்கு “



## புதிய மனிதன்

“எது நடந்தாலும் எதிர்கொண்டுதான் ஆகணும். இப்போ என்ன செய்யலாம்“

“வேறென்ன பண்றது. அந்த முகத்தை எடுத்துட்டு வேற யாரோட முகத்தையாவது போடவேண்டியதுதான்.” என சலிப்புடன் சொல்லிவிட்டு,

“டிசைனைத் திருத்தி உங்களுக்கு அனுப்பறன். நீங்க ஓகே சொன்னா ஏஜெண்ட்டுக்கு அனுப்பிடறன்.” என்றார்.

டிசைன் மூன்றாவது முறையாகத் திருத்தம் செய்யப்பட்டு தினத்தந்திக்கு அனுப்பப் பட்டது.

இனி பிரச்சினை எதுவும் வருவதற்கு வாய்ப்பிருக்காது என்று நினைத்திருந்தபோது, எனது அலைபேசி ஒலித்தது. ஏஜெண்ட் அழைத்திருந்தார். நானே முதலில் பேசினேன்.

“ஏத்துக்கிட்டாங்களா சார்“

விரக்தியான குரலில் ஏஜெண்ட் சொன்னார்.

“இல்லீங்க சார்”


சற்று குரலை உயர்த்தி, “என்ன சொல்றீங்க“ எனக் கேட்டேன்.

“ஒருத்தர் தோள்ல பச்சைத் துண்டு போட்டுருக்கில்ல, அந்த துண்டு இருக்கக் கூடாதாம்.” என்றார்.

“ஏன்“

“அது விவசாய சங்கத்த அடையாளப் படுத்துதாம். அப்புறம் இன்னொன்னு.. அவரு அய்யாக்கண்ணு மாதிரி இருக்காராம். அவரையும் எடுத்துட சொல்றாங்க.” என்றார்.

“என்ன விளையாட றாங்களா.. கதையின் கருவே அந்தக் கேரக்டர்தாங்க. அதை நீக்கமுடியாது. அவர் பேரு அய்யநாதன். தினமும் பல சேனல்கள்ல விவாத நிகழ்ச்சிகளில் பங்கேற்கவரு. தினத்தந்தி



டிவியிலேயே பலமுறை பேசி-யிருக்காரு. அவருக்கும் விவசாய சங்கத் தலைவர் அய்யாக்கண்ணுவுக்கும் உருவ ஒற்றுமை எதுவும் இல்ல." என நான் கோபத்தின் உச்சியிலிருந்து கத்தினேன்.

ஏஜெண்ட் அமைதியாக சொன்னார். இது, சலிப்பில் வரும் அமைதி.

"எல்லாத்தையும் அவங்ககிட்ட சொல்லிட்டேன். ஒத்துக்க மாட்டன்றாங்க. இப்போ அவங்க, பரமசிவன் கழுத்துல இருக்கற பாம்பு மாதிரி சார்"

"விளம்பரப் பிரிவின் நிர்வாகியுடன் நானே பேசறன். அவரோட நம்பர் கொடுங்க" என்றேன்.

"வேணாங்க சார். நீங்க டென்ஸன்ல எதையாவது பேசி காரியத்தைக் கெடுத்திடாதீங்க. இன்னொருவாட்டி நானே பேசிப் பாக்கறேன்" என சொல்லிவிட்டு இணைப்பைத் துண்டித்தார்.

காத்திருந்தேன். ஒருசில நிமிடங்களில் தொடர்புக்கு வந்தார், ஏஜெண்ட்.

"சார், அவங்க என்ன சொல்றாங்கன்னா..." என இழுத்தார்.

"தயங்காம சொல்லுங்க சார்" என்றேன்.

"பச்சைத் துண்டு போட்டுக்கிட்டு டிசைன்ல இருக்கருவரு அய்யாக்கண்ணு இல்ல, அவருக்கும் இவருக்கும் எந்தத் தொடர்பும் இல்லன்னு நீங்க லெட்டர் கொடுக்கணும்னு சொல்றாங்க. அதுமட்டுமில்ல. இதனால ஏதாவது பிரச்சினை வந்தா அதுக்கு நீங்கதான் பொறுப்பின்னும் எழுதிக் கொடுக்கணுமாம்."

"இதென்னங்க மடத்தனமா இருக்கு. ஒவ்வொரு படத்துக்கும் அந்தந்த டைரக்டரோட லெட்டர்



வாங்கிணுதான் விளம்பரம் போடறாங்களா? ஓவரா ஆடறாங்க சார். இது சரியில்ல” என்றேன்.

“உங்கள நெனைச்சா எனக்கும் கஷ்டமாத்தான் இருக்கு. கொஞ்சம் பொறுமையா இருங்க சார். இப்போ நமக்கு வேலை ஆகணும். தயவுசெஞ்சி அவங்க கேட்டபடி லெட்டர் எழுதி அனுப்புங்க சார்.” என்றார்.

“சரி, லெட்டர் அனுப்பறன். இதுதான் என்னோட கடைசி முயற்சி. இதுக்குப் பிறகும் ஏதாவது சொன்னாங்கன்னா, தினத்தந்தி விளம்பரமே வேணான்னு முடிவெடுத்துடுவேன்.” என்றேன்.


“உடனே அனுப்புங்க சார். லேட்டாயிட்டா பேஜ் (Page) ஒதுக்கமுடியாதுன்னு சொல்றாங்க” என அவசரப்படுத்தினார்.

நான், அலைபேசி இணைப்பைத் துண்டித்துவிட்டு கடிதம் எழுதத் தொடங்கினேன். இடையில், டிசைனர் அழைத்தார்.

“ஓகே ஆயிடுச்சிங்களா சார்” எனக் கேட்டார்.

எ ன் னி ட மி ரு ந் து உறுதிமொழி கடிதத்தைக் கேட்டிருப்பதாக சொன்னேன். அவரால் கோபத்தை அடக்க முடியவில்லை. தினத்தந்தி மீது அவர் பொழிந்த வசைவார்த்தைகளை எழுத்தில் எழுதுவதற்கு என்னால் இயலாது.

‘₹2000’ படத்தில் நடித்திருக்கும் தோழர் அய்யநாதன் அவர்களைப் பற்றி சுருக்கமாகக் குறிப்பிட்டு,


ஃபீனிக்ஸ் திரைப்படைப்பகம்

PHOENIX THIRAIPADAIPAGAM
Dwaraga Flat, 2B Second Floor, No: 16,
Ottai Pillayar Kovil Street,
Aranganathan Nagar,
VIRUGAMBAKKAM, CHENNAI-92.

அனுப்புநர்

பெறுநர்
மேலாளர் அவர்கள்,
‘தினத்தந்தி’ நாளேடு,
சென்னை - 7

ஐயா வணக்கம்,

நன்றி !

‘தினத்தந்தி’க்கு அனுப்பப்பட்ட உறுதிமொழிக் கடிதம்

அவர், விவசாய சங்கத் தலைவர் அய்யாக்கண்ணு அல்லர் என்று உறுதியளித்து கடிதம் எழுதி அனுப்பி வைத்தேன்.

ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு ஏஜெண்ட் பேசினார்.

“ஒகே சார், நாளைக்கு நம்ம விளம்பரம் வந்துடும்“ என்றார். அவரது குரலில், விரக்தியிலிருந்து மீண்ட இளைப்பாறுதலை உணர முடிந்தது. அலைச்சலின் அயற்சியும், முயற்சி நிறைவேறியதன் மகிழ்ச்சியும் கலந்த குரல், அது.

அவரே தொடர்ந்து பேசினார்.

“இன்று முதல், இரண்டாவது நாள், மூன்றாவது நாள் அப்படின்னு கொடுக்கிற விளம்பரங்கள்ல எந்தப் பிரச்சினையும் வராம பார்த்துக்கோங்க, சார்.” என்றார்.

‘₹2000’ திரைப்படத்தைப் பொறுத்தவரை, தினத்தந்தியின், ‘நிலைப்பாடு’ என்ன என நான் புரிந்து கொண்டிருப்பதாகவும், அந்த நிலைப்பாட்டின் கயிற்றினை ஆட்டுவிக்கும் கரங்களைத் தெரிந்து கொண்டிருப்பதாகவும், அதனால், அடுத்தடுத்த

நிகழ்கால சூழலில், ஊடக சுதந்திரத்திற்கு ஆதரவாகக் குரலெழுப்புவதைப் போலவே, ஊடக எதேச்சதிகாரத்திற்கு எதிராகக் குரலெழுப்புவதும் அவசியமாகிறது.

விளம்பரங்களுக்கான டிசைன்கள், ‘அவர்கள்’ விருப்பப்படியே அமைத்துக் கொடுக்கப்படும் எனவும் நான் சொல்லியதைக் கேட்டு, ஏஜெண்ட்டுக்கு ஏற்பட்டிருந்த களைப்பும் சோர்வும் விலகியிருக்க வேண்டும்.

நிகழ்கால சூழலில், ஊடக சுதந்திரத்திற்கு ஆதரவாகக் குரலெழுப்புவதைப் போலவே, ஊடக எதேச்சதிகாரத்திற்கு எதிராகக் குரலெழுப்புவதும் அவசியமாகிறது.

**பின் குறிப்பு :**

இரண்டு மாதங்களுக்கு முன்பு, ‘THE ROOSTER NEWS’ என்னும் You Tube

சேனலுக்கு, தோழர் அய்யநாதன் அளித்திருந்த நேர்காணலில், '₹2000' திரைப்படத்தில் நடித்த அனுபவங்களையும், படத்தின் சிறப்புகளையும் பதிவு செய்திருந்தார். மேலும், தற்போது, சமூக ஊடகங்களின் வழியே ஏறத்தாழ ஒரு கோடி பேர் பார்த்திருப்பதை சாதனை எனக் குறிப்பிட்டார். கூடவே, திரைப்படம் திரையரங்குகளில் வெளியானபோது, 'தினத்தந்தி' யில் வெளியிடப்பட்ட விளம்பரங்களில் தனக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என குறைபட்டுக் கொண்டார். அவரது நேர்காணலைப் பார்த்த நான், உடனே அவருடன் தொடர்பு கொண்டேன். படத்தின் விளம்பரங்கள் தொடர்பாக, தினத்தந்தி நாளேட்டுடன் நடத்தப்பட்ட 'போராட்டம்' குறித்து முதன்முறையாக வெளிப்படுத்தினேன். நடிகர் அய்யநாதன் மற்றும் விவசாயிகள் சங்கத் தலைவர் அய்யாக்கண்ணு ஆகியவர்கள் தொடர்பாக தினத்தந்திக்கு நான் கொடுத்த உறுதிமொழிக் கடிதத்தையும் அனுப்பி வைத்தேன். அதைப் பார்த்துவிட்டு தொடர்புக்கு வருவார் என எதிர்பார்த்தேன். ஆனால், இன்றுவரை தொடர்பு கொள்ளவில்லை. ஒருவேளை, 'தினத்தந்தி' தொலைக்காட்சி உட்பட ஏறத்தாழ அனைத்து தொலைக்காட்சிகளிலும் தொடர்ந்து உரையாடி வரும் தன்னை அடையாளம் தெரியாதவர்கள் தினத்தந்தி குழுமத்திலேயே இருக்கிறார்களே என்றோ, அல்லது, தன்னைத் தெரிந்து கொண்டும் தெரியாதவர்கள் போல அலட்சியப்படுத்தி விட்டார்களே என்றோ ஏதோ ஒரு அதிர்ச்சியிலும் வருத்தத்திலும் தோழர் அய்யநாதன் ஆழ்ந்திருக்கலாம்.

## முக்கியமான பின் குறிப்பு :

'₹2000' திரைப்படம் குறித்து அறிந்திருந்தும், இதுபற்றி மறந்தும்கூட 'மூச்சுவிடாத' மார்க்சிய, 'புரட்சிகர' இயக்கங்களைச் சார்ந்த, 'தோழர்கள்' மற்றும் இயக்கங்கள்... தங்களை, பெரியாரியவாதிகளாகவும் அம்பேத்கரிவாதிகளாகவும் சொல்லிக் கொள்கிற ஆளுமைகள்

மற்றும் இயக்கங்கள்... ஆகியவர்கள் மீதும், மக்களுக்கான படைப்பின் மீதான கபட மவுனம் பற்றி எழுதப்போகிறேன். கூடவே, பிரபலமானவர்கள் நடித்திருக்கிறார்கள் அல்லது பிரபலமானவர்கள் இயக்கியிருக்கிறார்கள் என்பதற்காகவே, 'தோழர்களாலும் சமூக ஆர்வலர்களாலும்' விழாக்கள் எடுக்கப்பட்டும் பாராட்டுக் கூட்டங்கள் நடத்தப்பட்டும் கொண்டாடப்பட்ட வணிகத் திரைப்படங்களின் 'மக்களுக்கான அரசியலை' வெளிக்காட்டப் போகிறேன். அதன்மூலம், புரட்டல்வாதிகளை அம்பலப்படுத்தப் போகிறேன்.



# பிரதிபலிப்பு

(புதிய மனிதன் இதழ் எண் 93ன் மீதான வாசகப் பதிவு)

## அறிவுப் பந்தி

புதிய மனிதன் இதழ் எண் 93 (சூலை 2022) செம்மையான உள்ளடக்கங்களுடன் அறிவுப் பந்தி நடத்துகிறது.

முசோலினியின் பாசிச இராணுவச் செயல்பாடுகளைப் பிரதியெடுத்து, இந்திய ஒன்றிய அரசு கொண்டுவந்துள்ள "அக்னிப் பாதைகள்" திட்டத்தின் மூலத்தையும், அதனால் விளையக்கூடிய பேரபாயத்தையும் எடுத்துச் சொல்லி, எச்சரித்திருக்கிறது இம்மாதத் தலையங்கம்.

"காலொடிந்த குதிரை ஓடை தாண்டுவதெப்படி?"... "வெள்ளப் பெருக்கு தன் வடிகாலை தானே தேடிக் கொள்ளும்" போன்ற வரிகளால் கவிதைவெளியைக் கனப்படுத்தியுள்ளார் கவிஞர் நவஜீவன். கவிஞர் பாரதி

சந்திரன் “எங்கு பார்த்தாலும் நீண்ட நேரம் என்னுடன் நின்றே செல்கிறது அந்த வெள்ளையன் அம்புலன்ஸ் வண்டி...!” என்று சோகம் கூட்டுகிறார். அவலமும் ஓர் இலக்கியச்சுவை தானே!

பெண்களின் உள்மனத் தீவிரங்களை, வேட்கையின் வெளிப்பாடுகளை உளவியல் ரீதியாக அணுகுகிறது எழுத்தாளர் நீலனின் “பிழையான சொற்கள் “ சிறுகதை.

“நான் மட்டுமல்ல இந்தியாவில் பிறந்த ஒவ்வொரு பெண்ணும் தன் கணவனை ஒரே ஒரு கணமாவது கொலை செய்ய நினைப்பவர்கள் தாம்!”... என்ன நீலன் இந்தியப் பெண்கள் மட்டும்தாமா...? உலகப் பெண்ணினத்துக்கே



இது பொதுமையாக இருக்கக் கூடும்தானே!

நீலன் குடிப்பதை இயல்பாக எடுத்துக் கொள்கிறார். என்னால் இயலவில்லை.

முன்பின் தெரியாத ஒருவனுடன் படித்த பெண்ணொருத்தி தானாக வந்து சேர்ந்து குடிக்கிறாள் என்பது நடைமுறை சாத்தியமா என்ற கேள்வி எழுந்தாலும், முடிப்பு கவித்துவமாக இருப்பதை ஒப்புக் கொள்கிறேன்.

ரூ.2000 திரைப்படம் தணிக்கையில் குதறப்பட்டதை, அதுவும் நடிகையாக இருந்த ஒருவரால் நிகழ்த்தப்பட்டதை, தன் மனம் மட்டுமல்ல படிப்பவர்கள் மனமும் வலிக்க வலிக்கச் சொல்லும் இயக்குநர் ருத்திரன் இறுதியில் தானொரு போராளியாகத் தொடர்வேன் என்னும்போது, வலி மறந்து கைதட்டுகிறோம்.

மக்கள் விடுதலைப் பண்பாட்டுப் பேரியக்க மாவட்ட அமைப்புக் கூட்டச் சேதிகள் சிறப்பு.

கோவை மாவட்டக் கூட்டத்தில் வாழ்த்துரை

புதிய மனிதன்

வழங்கிய தம்பித்துரை என் பல்லாண்டுகால இலக்கிய நண்பர் என்பதில் பெருமகிழ்வு. இனிய வாழ்த்துகள் தோழர்.

வற்றா அன்புடன்,
வெற்றிப்பேரொளி
ஜூலை 14, வியா

அன்பிற்குரிய புதிய மனிதன் வாசகர்களுக்கு...
வணக்கம்.

புதிய மனிதன் இதழில் நூல் அறிமுக விமர்சனப் பகுதி துவக்கப்படுகிறது. இப் பகுதிக்கு நூல்கள் அனுப்புபவர்கள் தங்கள் நூலின் இரண்டு படிகளை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

ஆசிரியர் குழு

பாட்டாளி
பொறுப்பாசிரியர்,
'புதிய மனிதன்'
12, திருவள்ளுவர் தெரு,
ஆர்எம்எஸ் காலனி (வடக்கு)
எடமலைப்பட்டி புதூர்,
திருச்சி - 620012.

# பேரியக்கச் செய்திகள்

## மக்கள் விடுதலைப் பண்பாட்டுப் பேரியக்கத்தின் சென்னை மண்டல அமைப்புக் குழு உதயம்

24.07.2022 அன்று மக்கள் விடுதலைப் பண்பாட்டுப் பேரியக்கத்தின் சென்னை மண்டல அமைப்புக் குழு (சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்கள்) இனிதே உதயமானது. மக்கள் விடுதலை கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டுக் குழுத் தலைவரும், மூத்த பேராசிரியருமான தோழர் மு. திருமாவளவன் தலைமையற்க, மூத்த தமிழறிஞர் விருது பெற்ற பாவலர் கீர்த்தி அவர்களின் "வேடிக்கை பார்ப்பதாலே வேதனைகள் தீராதே" என்கிற துவக்கப்பாடலோடு கூட்டம் துவங்கியது.

மக்கள் விடுதலைப் பண்பாட்டுப் பேரியக்கத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர்

தோழர் பாட்டாளி அவர்களின் நோக்கவுரைக்குப் பின்னர், சென்னை மண்டல அமைப்புக் குழு தேர்வு செய்யப்பட்டது. தோழர்கள் பேராசிரியர் மு. திருமாவளவன், வழக்குரைஞர் நடராஜன், பாவலர் கீர்த்தி, வழக்குரைஞர் தமிழன் மணி, ராஜாமணி, அசோகன், உள்ளிட்ட ஆறு தோழர்கள் கொண்ட மக்கள் விடுதலைப் பண்பாட்டுப் பேரியக்கத்தின் சென்னை மண்டல அமைப்புக் குழு உருவாக்கப்பட்டது. பின்னர் சென்னை மண்டல அமைப்புக் குழுவிலிருந்து வழக்குரைஞர் தோழர் நடராஜன் அவர்கள் சென்னை மண்டல அமைப்பாளராகத் தேர்வு செய்யப்பட்டார்.

கம்யூனிஸ்ட் கட்சி மாலெ மக்கள் விடுதலையின் சேர்மன் தோழர் ஜெ. சிதம்பரநாதன் அவர்கள் வாழ்த்துரை வழங்க, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சென்னை மண்டல அமைப்புக் குழு உறுப்பினர் வழக்குரைஞர் தோழர் தமிழன் மணி அவர்களின் நன்றியுரையோடு அமைப்புக் குழுக் கூட்டம் இனிதே நிறைவடைந்தது.




எங்களின் தாகம்
சாதி ஒழிந்த
தன்னாட்சி கொண்ட
சோசலிசத் தமிழ்நாடு